உதவி அமர்வு/சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.
எஸ்சி.எண்.124/2015

| | | |
|---|---|---|
| பெயர் | .. | தெய்வராஜ் (அசா6) |
| த/பெ. க/பெ. | .. | |
| கிராமம் | .. | |
| தாலுகா | .. | |
| தொழில் | .. | |
| ஜாதி | .. | |
| மதம் | .. | |
| வயது | .. | |

1873ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2018ம் ஆண்டு ஜுலை மாதம் 10 ம் நாள் இந்நீதிமன்ற உதவியாளரால் மேற்படியாரிடம் சத்திய பிரமாணம் பெறப்பட்டது.
10/07/2018

முதல் விசாரணை:-

நான் பஸ்டாண்ட் ஆட்டோ ஸ்டாண்டில் ஆட்டோ டிரைவராக இருக்கிறேன். இந்த வழக்கில் காயம்பட்ட நபரான ஜெயக்குமார் எனக்கு மாமா முறை வேண்டும். ஜெயக்குமார் சண்முகசிகாமணி நகரில் உள்ள தோட்டத்துடன் கூடிய வீட்டில் இருக்கிறார். 08.09.2014 அன்று இரவு சுமார் 8.30க்கு நான் ஆட்டோ ஒட்டிக்கொண்டிருக்கும்போது ஜெயக்குமார் என்பவர் போன் செய்து ஆஸ்பத்திரிக்கு செல்ல வேண்டும் என்று கூறி தோட்டத்திற்கு வருமாறு அழைத்தார். நான் அங்கு சென்றேன். நான் அங்கிருந்து எனது மாமாவை கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு கொண்டு போய் விட்டேன். அவர் ஆஸ்பத்திரியில் சேர்த்தபோது யார் என்ன செய்தார்கள் என்று கேட்டபோது செல்வகுமாரும், இருதயராஜ் என்பவரும் சேர்ந்து தன்னை அரிவாளால் வெட்டிவிட்டதாக கூறினார். இது சம்பந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

குு.வி: எதிரிகள் தரப்பில்:

நீதிமன்றத்தில் சொன்ன விசயத்தை எல்லாம் போலீஸார் விசாரிக்கும் போதும் சொன்னேன். சம்பவத்திற்கு 2 வருடத்திற்கு முன்பாகவே நான் ஆட்டோ ஓட்டிக்கொண்டிருக்கிறேன். 2000ம் ஆண்டில் பிரிண்டிங் பிரஸில் வேலை பார்த்தேன். காயம்பட்ட ஜெயக்குமார் எனக்கு மாமா முறை வேண்டும். நான் அப்போது பழைய பேருந்துநிலையத்திலிருந்து பாரதிநகருக்கு சவாரி செய்து கொண்டிருந்தேன். அசா1க்கு வீட்டிற்கு அருகில் உள்ள முத்துராஜ் எனக்கு முதலில் தகவல் சொன்னார். முத்துராஜ் வீடு அசா1ன் வீட்டிற்கு அருகில் உள்ளது. ஆஸ்பத்திரிக்கு ஆட்டோவில் செல்லும்போது ஸ்டீபன் மற்றும் ஜெயக்குமார் ஆகியோர் வந்தனர். ஸ்டீபன் எனக்கு போன் மூலம் தகவல் எதுவும் சொல்லவில்லை. நான் ஜெயக்குமார் வீட்டிற்கு வந்தபின்புதான் அவர் தாக்கப்பட்ட விபரம் எனக்கு தெரியவந்தது முதலில் எனக்கு தெரியாது. நான் அசா1ன் வீட்டிற்கு சென்றபோது பத்து பதினைந்து பேர் கூடியிருந்தார்கள். நானும் ஸ்டீபனும் அசா1ஐ கைத்தாங்கலாக பிடித்து ஆட்டோவிற்கு கூட்டிவந்தோம். அசா1 மற்றும் என்னுடைய ஆடைகள் இரத்த கறையாகிவிட்டது. போலீஸார் விசாரிக்கும் போது மேற்படி விசயத்தை சொன்னேன். இரத்தகறை படிந்த எனது ஆடைகளையும் போலீஸார் மறுநாள் வாங்கிவிட்டார்கள். அசா1ன் நண்பர்கள் உடன் இருந்தார்களா என்று எனக்கு தெரியவில்லை. சம்பவத்திற்கு முன்பாக ஸ்டீபன் என்பவரை தெரியுமா என்றால் தெரியும். மருத்துவமனைக்கு வந்தவுடன் மருததுவரிடமும், போலீஸாரிடமும் ஸ்டீபன்தான் நடந்த விபரங்களை சொன்னார். அசா1க்கு ரத்தம் அதிகம் போனதால் அவர் மயங்கிய நிலையில் தான் இருந்தார். அசா1ஐ அரசு மருத்துவமனையிலிருந்து தனியார் மருத்துவமனைக்கு கூட்டிச்சென்றபோது நான் உடன் செல்லவில்லை. அசா1 இரவு முழுவதும் கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் தான் இருந்தார். போலீஸார் என்னை மருத்ஜுவனையில் விசாரித்தபிறகு மறுபடியும் விசாரிக்கவில்லை. ஜெயக்குமாருக்கு எப்போது மயக்கம் தெளிந்தது என்று எனக்கு தெரியாது. நான் சொன்னது போல் சொன்ன

நேரத்தில் அசா1 மற்றும் ஸ்டீபன் ஆகியோர்களை எனது ஆட்டோவில் ஏற்றி மருத்துவமனைக்கு ஏற்றிச்செல்லவில்லை என்றாலும் அசா1 எனக்கு உறவினர் என்பதால் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் நான் சம்பவம் நடந்த அன்று அசா1ஐ பார்க்கவேயில்லை என்றாலும் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது

(ஒ-ம்) A.K.பாபுலால்,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.